# இந்திய அலுவலர்கள் சங்கம்

## சென்னை - 600 014

## 2-10-2004 அன்று நடைபெற்ற பொதுக்குழுக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

இந்திய அலுவலர்கள் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் 2–10–2004 அன்று காலை 10.30 மணிக்கு, சென்னை 600 034–ல் உள்ள கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, எண்.13–ல் உள்ள "ஓட்டல் பாம்குரோவ்"–ல் உள்ள "கே.ஜே.பி.எம்." கூட்டத்தில் நடைபெற்றது.

இந்திய அலுவலர்கள் சங்கத்தைச் சார்ந்த 105 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சங்கத் தலைவர், மாண்புமிகு திரு. நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமை தாங்கினார்.

**வரவேற்புரை :**

சங்கத்தின் துணைத்தலைவர் – 1 திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அவர் தனது வரவேற்புரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இந்த சங்கத்தின் முன்னோடிகளின் அரும்பணியால் சென்னையின் முக்கிய இடத்தில் ஏறத்தாழ 1 ஏக்கர் 37.5 சென்ட் நிலமும் அதன் மீது சிறப்புமிக்க கட்டிடமும் அமைந்துள்ளன. தன்னலம் கருதாது பொது நல எண்ணத்தில் செயல்பட்டதால் இவை சாத்தியமாயின. இந்த சங்கம் பல்வேறு நற்பணிகளை ஆற்றி வருகின்றது. இலவச மருத்துவ மையம் ஒன்றை விரைவில் அமைக்க உள்ளோம். ஆண்டு தோறும் மருத்துவ முகாம் நடைபெறுவதை யாவரும் அறிவீர்கள். சுயநலம் கருதாது பொதுநல உணர்வோடு செயல்பட்டால் இன்னும் பல அரியவற்றை சாதிக்கலாம். இத்தகைய சாதனை நிகழ்த்த அனைத்து உறுப்பினர்களையும் உறுதுணைபுரியுமாறு கேட்டுக் கொள்வதோடு இங்குள்ள அனைவரையும் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று அமைகிறேன்.

**தலைமை உரை :**

திரு. நீதியரசர் ஏ. கே. ராஜன் தனது தலைமையுரையில் பின்வரும் கருத்துகளைத் தெரிவித்தார் :–

விடுதியில் சில முன்னேற்றம் செய்யப்பட்டவுள்ளது. மாணவர் விடுதியில் பழைய மரகட்டில்கள் உள்ளன. அவற்றிற்குப் பதிலாக

இரும்பு படுக்கைகள் வாங்கிக் கொடுக்க இருக்கிறோம். நமது வளாகத்தில் உள்ள வாடகைக்காரர்கள், வாடகை அதிகம் என முறையிட்டுள்ளனர். அதனை செயற்குழுவில் விவாதித்தபோது, அதனைப் பொதுக்குழு உறுப்பினர் முடிவிற்கு விட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நமது சங்கம் பல நல்ல காரியங்களை செய்திருக்கிறது; அதனை நாம் தொடர வேண்டும். அனைவரும் ஒற்றுமையுடனும் தன்னலமின்றியும் செயல்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் எழுபது வயது எய்திய 44 உறுப்பினர்களுக்கு சில மூத்த உறுப்பினர்கள் மூலம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. பொன்னாடை போர்த்தி கௌரவித்தவர்கள்:-

1. மாண்புமிகு நீதியரசர் திரு. மருதமுத்து
2. திரு. ரங்கபாஷ்யம், இ. ஆ. ப.
3. திரு. பைரவன், ஆகியோர் ஆவர்.

**ஆண்டறிக்கை சமர்ப்பித்தல் :-**

சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. பொன். லட்சுமணன் சங்கத்தின் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார். ஆண்டு அறிக்கை புத்தக வடிவில் ஒவ்வொருவர் கையிலும் உள்ளது என்றும், அதனை வாசித்ததாக கருதிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். அதனையொட்டி பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 30-11-2003-ம் தேதி நடைபெற்ற பொதுக்குழு கூட்ட முடிவுக் குறிப்புகளை பொதுக்குழு ஏற்றுக் கொண்டும் ஒப்புதல் அளித்தும் தீர்மானம் நிறைவேறியது.

2. 1-4-2003 முதல் 31-3-2004வரைக்கான ஆண்டு அறிக்கையையும் அதே ஆண்டிற்கான வரவு-செலவு கணக்கையும் பொதுக்குழு ஒரு மனதாக ஏற்றுக் கொண்டும் ஒப்புதல் அளித்தும் தீர்மானம் நிறைவேறியது.

3. 2004-2005க்கான ஆண்டிற்கு, தணிக்கையாளரான ராஜா அசோசியேட்ஸ், மீண்டும் மறு நியமனம் செய்ய ஒப்புதல் அளித்தது.

4. இந்திய அலுவலர்கள் சங்கத்தல் உள்ள திரு. நீதியரசர் பிரதாப் சிங் மாளிகையில் உள்ள வாடகைதாரர்கள் வாடகையை குறைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் விவாதத்திற்கு விடப்பட்டது. பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர். இறுதியில் கீழ்க்கண்ட முடிவு ஒரு மனதாக எடுக்கப்பட்டு அதற்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

**1. வாடகை :**

தரைத்தளத்தில் உள்ள கடைகளுக்கு வாடகை மற்றும் பராமரிப்பு செலவு 20 விழுக்காடு வரை குறைக்கலாம். முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் உள்ள கடைகளுக்கு வாடகை மற்றும் பராமரிப்பு செலவு 15 விழுக்காடு வரை குறைக்கலாம். வாடகைதாரர்கள் செலுத்தும் பாதுகாப்பு முன் பணத்தையும், அதே விகிதத்தில் குறைக்கலாம்; இதனைச் செயல்படுத்தும் விதம் குறித்து செயற்குழு முடிவெடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டது.

**2. ஆயுள் சந்தா மட்டும் :**

இப்போதைய சங்க துணைவிதிகளின் படி சாதாரண ஆண்டு சந்தாதாரர்களும், ஆயுட்கால சந்தாதாரர்களும் அங்கத்தினர்கள் ஆகலாம் என உள்ளது. அதனைத் திருத்தி இனிமேல் ஆண்டு சந்தாதாரர்களாக யாரையும் சேர்க்க வேண்டியது இல்லை; ஆயுள் சந்தாதாரர்களாக மட்டும் சேர்க்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டு அதனடிப்படையில் இந்திய அலுவலர்கள் சங்கத்தின் துணைவிதி 9 (ii) (a) சாதா உறுப்பினர்.

மற்றும் "துணைவிதி 9 (iii) (a) ஆயுள் சந்தாதாரர் அல்லாத ஆண்டு சந்தா செலுத்துபவர் சாதா உறுப்பினர் ஆவர். (An ordinary member is one who is not life member and who pays his subscribtion annually) ஆகியவை நீக்கப்படுவதுடன்," "துணைவிதி 10 (i) Ordinary member (Ordinary menbers) Rs. 100 (Hundred) per annum for persons in service and Rs. 50/-(Fifty) per annum for pensioners or at rate as may be fixed by General Body from time to time.

There shall be no notice calling for subscriptions payable. The annual subscription shall be sent M.O. / D.D. to the General Secretary of the Association in advance, not later than 24th December of the year. நீக்கப்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது". மேலும் "துணைவிதி 11ல் "Clause 9 (ii) (a) and (b) above" என்பதில் "a & b" என்ற எண். குறிக்கும் எழுத்து நீக்கப்படுவதாகவும்,".

"(a) & (b) என்ற எழுத்துக்கள் நீக்கப்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது".

மேலும் "துணைவிதி 12(iv) The annual subscription to be sent along with the application shall be for the year beginning from the first of January of the year and ending with 31st December of the year in which the application is made. நீக்கப்படுவதாகவும்".

"துணைவிதி 13(i) Any member who has ceased to be a member is eligible for readmission subject to the provisions of Clause 12(i) and

(ii) above and the provisions of the Bye-laws. நீக்கப்படுவதாகவும் தீர்மானம் இயற்றப்பட்டது."

"துணைவிதி 12(ii)ல் (ii) என்ற எண் நீக்கப்படுவதாகவும்"

இத்தீர்மானங்கள் அனைத்தும் ஏக மனதாகவும் நிறைவேற்றப்பட்டன.

3. 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் ஆயுட்கால உறுப்பினர்கள் ஆகும்போது அவர்களுக்கு ஆயுட்கால சந்தா தொகையில் 25% தள்ளுபடியில் கொடுக்கலாம் என்ற திரு. அலாவுதீன், இ. ஆ. ப. முன்மொழிந்த திருத்தமும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது. துணை விதிகளில் தக்க திருத்தம் செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

பிற பொருட்கள் :–

பொதுக்குழுவின் அனுமதியுடன் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டனண்

(i) Dr. சுப்பிரமணி முன்மொழிந்த தீர்மானம்.

"பணி ஓய்வு பெற்ற அலுவலர்களின் மருத்துவ படி ரூ. 50 ஆக உள்ளது. வயதானவர்களுக்கு இந்த குறைந்த தொகை போதியதாக இல்லை. 60 வயதுக்கு மேல் பல நோய் வர வாய்ப்புள்ளது. எனவே மருத்துவப்படியை ரூ. 200 ஆக உயர்த்தும் படி அரசை கேட்டுக் கொள்வதென ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது."

2. திரு. மனோன்மணி முன் மொழிந்த தீர்மானம்.

1. மத்திய அரசு அதன் பணியாளர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் 1–7–2003 முதல் அகவிலைப்படியை 59 விழுக்காடுகளாகவும் 1–1–2004 முதல் 61 விழுக்காடுகளாகவும், 1–7–2004 முதல் 64 விழுக்காடுகளாகவும் நிர்ணயித்து ஆணை வழங்கியிருப்பது போல் தமிழ்நாடு அரசும் 1–7–2003, 1–1–2004, 1–7–2004 தேதிகளில் அகவிலைப்படியை முறையே 59 விழுக்காடுகளாகவும், 61 விழுக்காடுகளாகவும், 64 விழுக்காடுகளாகவும் நிர்ணயித்து பணியாளர்களும், ஓய்வூதியர்களும் பயன்பெற ஆணை வழங்குமாறு தமிழ்நாடு அரசினை இச்சங்கம் (Indian Officers Association) மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

2. தமிழ்நாடு அரசு நிதி (ஓய்வூதியம்) துறை அரசாணை 562, தேதி 11–7–1995–ல் ஓய்வூதியர்களின் சேமநலநிதி (Pensioners Health Fund) என்ற திட்டத்தை ஆரம்பித்து ஓய்வூதியர்களுக்கு சிறப்பு

அறுவை சிகிக்சைக்கு (Specialised Surgery Treatment) வழங்கி வரும் அதிகப்படியான சலுகையான ரூ. 50,000/–த்தை அதிகரித்து ரூ. 1,00,000/– ஆக வழங்க ஆணையிடும்படி தமிழ்நாடு அரசினை இச்சங்கம் (Indian Officers Association) மிகவும் வேண்டி கேட்டுக் கொள்கிறது.

3. 9–1–1992 தேதியிட்ட தமிழ்நாடு அரசு நிதி (சம்பளம்) துறை அரசாணை 18–ல் பணியாளர்களின் சேமநலநிதி (Employees Health Fund) என்று ஒரு திட்டத்தை பணியாளர்களுக்கும், 11–7–1995 தேதியிட்ட அரசாணை 562–ல் ஒய்வூதியர்கள் சேமநலநிதி (Pensioners Health Fund) என்ற ஒரு திட்டத்தை ஒய்வூதியர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி குறிப்பிட்ட சில வியாதிகளுக்கு சில குறிப்பிட்ட மருத்துவமனையில் சிறப்பு அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சைகளுக்கு (Specialised Surgery / Treatment) சலுகை வழங்கி வருகிறது. 29–8–2000 தேதியிட்ட அரசு நிதி (சம்பளம்) துறை அரசாணை எண். 400–ல் வியாதிகளின் எண்ணிக்கையும், மருத்துவமனையின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி பணியாளர்கள் அதிக பயன்கள் பெற அரசு ஆணையிட்டுள்ளது. இந்த சலுகை ஒய்வூதியர்களுக்கு வழங்கப்படவில்லை.

அரசாணை எண். 400 தேதி 29–8–2000–ல் குறிப்பிடப்பட்டுள்ள வியாதிகளும் மருத்துவமனைகளும் "ஒய்வூதியர்கள் சேம நலநிதி" (Pensioners Health Fund) திட்டத்திலும் இடம் பெற்று ஒய்வூதியர்களும் பயனடையத்தக்கதாக ஆணை வழங்கும்படி தமிழ்நாடு அரசினை இச்சங்கம் (Indian Officers Association) வேண்டி கேட்டுக் கொள்கிறது.

இத்தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைகள் :–

1. திரு. கா. அலாவுதீன் இ. ஆ். ப. துணைத்தலைவர் – 2

உறுப்பினர்கள் தங்கள் பிறந்த தினத்தை தெரிவித்தால் அவர்களுக்கு சங்கம் வாழ்த்துச் செய்தி அனுப்பலாம்.

2. திரு. பி. முருகேசன்

நம் சங்க உணவு விடுதியின் விடுமுறைக்காலம் அதிகமாக உள்ளது. அதனை குறைக்க வேண்டும்.

3. திரு. வி. எஸ். கந்தசாமி

இந்திய அலுவலர்கள் சங்க வளாகத்தில் வாகனம் நிறுத்த இப்போது கட்டணம் வசூலிப்பது இல்லை. இதனால் சம்பந்தமில்லாத

பிற வாகனங்கள் நமது வளாகத்தில் நிறுத்தப்படுகின்றன. அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. திரு. ஏ. எல். நமசிவாயம் மற்றும் சில உறுப்பினர்கள்

திரு. எஸ். முத்துக்கிருஷ்ணன், டாக்டர். கண்ணப்பன், பி.எம். பாண்டியன், திரு. ஈ. கிருஷ்ணன், டாக்டர் சத்தியமூர்த்தி ஆகியோர் சங்கத்தின் பொதுக்குழு 2–10–2003 நடைபெறாத வகையில் நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றனர். அந்த ஆணையால் சங்கத்திற்கு ஏற்பட்ட செலவுகளை தரக்கோரி சங்கம் அவர்களுக்கு வக்கீல் மூலம் அறிவிப்பு கொடுத்துள்ளது. வக்கீல் அறிவிப்பு இந்திய அலுவலர்கள் சங்கம் அளித்ததாக உள்ளது. ஆனால் இந்திய அலுவலர்கள் சங்க சார்பில் அதன் பொதுச் செயலாளர் அறிவித்ததாக இருந்திருக்க வேண்டும் என்றார். மேலும் இந்தப் பிரச்சனையை மறப்போம், மன்னிப்போம் என விட்டிருக்கலாம் என்று தெரிவித்தார். திரு. பொன்னிறைவன் இவ்விவரம் குறித்து செயற்குழுவிற்கு தெரிவிக்கவில்லை என்றார். அதற்கு செயற்குழுவில் ஏகமனதாக தீர்மானத்தின் அடிப்படையில் தான் வக்கீல் மூலமான அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்று விளக்கம் அளிக்கப்பட்டது. திரு. ஜெயக்குமார், சங்கத்திற்கு இழப்பு ஏற்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். திரு. சொக்கலிங்கம், சிலர் வேண்டுமென்றே நியாயமில்லாமல் சங்கத்திற்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர் என்றும் அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார். திரு. கா. அலாவுதீன், இந்த நடவடிக்கை செயற்குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது எனக் குறிப்பிட்டார். திரு. அருணாசலமும், திரு. சண்முக வடிவேலுவும் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தார்கள்.

இறுதியாக தலைவர், சம்பந்தப்பட்டவர்களின் விளக்கத்தினை பெற்றபின் இதனைப் பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

வந்திருந்த பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவித்த பின் நாட்டுப் பண்ணுடன் பொதுக்குழுக் கூட்டம் இனிதே நிறைவேறியது.

| | |
|---|---|
| ஒப்பம்/– | ஒப்பம்/– |
| **பொன். லட்சுமணன்** | **ஆர். செல்லமுத்து** |
| *பொதுச் செயலாளர்* | *துணைத்தலைவர் (1)* |
| ஒப்பம்/– | ஒப்பம்/– |
| **கா. அலாவுதீன்** | **ஏ.கே ராஜன்** |
| *துணைத்தலைவர் (2)* | *தலைவர்* |